# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 09.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள். SA 14687/SCIC/2022 & CP 1429/SCIC/2022**

திரு. க.கணேஷ் த/பெ.கங்காதரன் மேல்முறையீட்டாளர்
பழைய எண்.66A/6. புது எண்.11
மெட்டு 3வது தெரு, சாத்துமா நகர்
திருவொற்றியூர், சென்னை-600 019.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ....... பொதுஅதிகார அமைப்பு
வட்டாட்சியர் அலுவலகம்
வண்டலூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்.

**ஆணை**

**SA 14687/SCIC/2022:**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 28.02.2022 |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 10.05.2022 |
| 3. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 11.07.2022 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 19.06.2023 |
| 5. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 28.08.2023 & 11.12.2024 |
| 6 | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 22.02.2025 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / வண்டலூர் தாலுக்கா அலுவலகம், ஓட்டேரி, பீர்க்கன்கரணை, சென்னை-48 அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “பார்வை - வண்டலூர் தாலுக்கா, கல்வாய் கிராமம், புல எண்.393/1A1 பட்டா எண்.722 - தொடர்பாக - கல்வாய் கிராமம் புல எண். 393/1A1 தொடர்பாக வண்டலூர் தாலுக்கா அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்ற பட்டா எண்.722-க்கான அ பதிவேடு, பட்டா, சிட்ட சான்றொப்பமிட்ட ஒளி நகல் வழங்கவும்” என்பன போன்று 2 (இரண்டு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**CP 1429/SCIC/2022:**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 28.02.2022 |
| 2. | மனுதாரரின் பிரிவு 6(1)-ன் கீழான மனு பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் | 01.03.2022 மற்றும் 18.03.2022 |
| 3. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 19.04.2022 |
| 4. | மனுதாரரின் புகார் மனு | 17.05.2022 |
| 5 | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 11.12.2024 |
| 6. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 22.02.2025 |

2. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / வண்டலூர் தாலுக்கா அலுவலகம், ஓட்டேரி, பீர்க்கன்கரணை, சென்னை-48 அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “பார்வை - வண்டலூர் தாலுக்கா, கல்வாய் கிராமம், புல எண்.393/1A1 பட்டா எண்.722 - தொடர்பாக - கல்வாய் கிராமம் புல எண். 393/1A1 தொடர்பாக வண்டலூர் தாலுக்கா அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்ற பட்டா எண்.722-க்கான அ பதிவேடு, பட்டா, சிட்ட சான்றொப்பமிட்ட ஒளி நகல் வழங்கவும்” என்பன போன்று 2 (இரண்டு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**3. மேற்குறிப்பிட்ட SA 14687/SCIC/2023 & CP 1429/SCIC/2023 ஆகிய இரண்டிலும் மனுதாரர் கோரியுள்ள தகவல் ஒரே பொருண்மை கொண்டதாக அமைந்துள்ளதால், அவ்விரண்டையும் ஒருங்கியலாக விசாரணை செய்ய ஆணையம் முடிவு செய்தது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், திருமதி/செல்வி.மு.ஷாமிளா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வண்டலூர் வட்டம் அவர்கள் ஆஜரானார். மனுதாரரின் 28/02/2022 தேதியிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கும், 10/05/2022 தேதியிட்ட பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவிற்கும் அப்போதைய (28/02/2022 தேதிய) பொதுத் தகவல் அலுவலர் திருமதி/செல்வி. ராஜேஸ்வரி அவர்களும் அப்போதைய (10/05/2022 தேதிய) மேல்முறையீட்டு அலுவலர் திரு. ஆறுமுகம் அவர்களும் எவ்வித தகவலையும் வழங்கவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, மேற்குறிப்பிட்ட முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் திருமதி/செல்வி.ராஜேஸ்வரி மற்றும் முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர் திரு.ஆறுமுகம் ஆகியோர் மீது பிரிவு 20(1) மற்றும் பிரிவு 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் பெற்று அதனை 24/07/2025 அன்று பிற்பகல் ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**4. இன்றைய விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு 29/09/2023 தேதியிட்டு தகவல் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். அதற்கு மனுதாரர், தனக்கு இனம் 1-க்கு மட்டுமே தகவல் அளிக்கப்பட்டுள்ளது, இனம் 2-க்கான தகவல் அளிக்கப்படவில்லை என்றார். அதற்கு பொதுத் தகவல் அலுவலர், இனம் 2-க்கான ஆவணத்தை தேடிக் கண்டுபிடிக்க ஆணையத்திடம் கால அவகாசம் கோரினார். ஆணையம் கால அவகாசம் வழங்கியதோடு, பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வண்டலூர் வட்டம் அவர்கள் மனுதாரரின் பிரிவு 6(1)-ன் கீழான மனுவில் கோரிய இனம் 2-க்கான ஆவணத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற ஒரு மாத காலத்திற்குள் தேடிக் கண்டுபிடித்து, மனுதாரருக்கு சரியான தகவலை / நகலை ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, மனுதாரருக்கு அனுப்பி வைத்த தகவலின் நகல் மற்றும் மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் முன்னாள் பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டு அலுவலர் ஆகியோரிடமிருந்து பெற்ற காரண விளக்கங்கள் ஆகியவற்றை ஆணையத்தின் முன் 24/07/2025 அன்று பிற்பகல் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**5. மனுதாரரின் புகார் மனுவைப் பொறுத்த வரையில், மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனு மீதான வழக்கு எண்.SA 14687/SCIC/2022 இன்று ஆணையத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு உரிய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் ஆகியோரிடமிருந்து பெறப்படுகின்ற காரண விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஆணையம் மேல்நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது என்பதை மனுதாரருக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்.தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். SA 14687/SCIC/2022 & CP 1429/SCIC/2022</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

1.பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
வண்டலூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்.

2.திரு.ஆறுமுகம்
முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர் / வட்டாட்சியர்
வண்டலூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்.

3.திரு.ராஜேஸ்வரி,
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வண்டலூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்.

**மேல்முறையீட்டாளர்**
திரு. க.கணேஷ் த/பெ.கங்காதரன்
பழைய எண்.66A/6. புது எண்.11
மெட்டு 3வது தெரு, சாத்துமா நகர்
திருவொற்றியூர், சென்னை-600 019.

நகல்
1.மாவட்ட ஆட்சித் தலைவர்
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்
செங்கல்பட்டு மாவட்டம்.

2.பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-35 (for follow up)

RG/PC